ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேசிய சங்வர்த்தனை வங்கி
Pradeshiya Sanwardana Bank

வேலை வாய்ப்பு

நாடு முழுவதும் 271 கிளை வலையமைப்பினாலான இலங்கையின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியில் பதவி வெற்றிடம் உள்ள பின்வரும் பதவிக்கு தேவையான தகுதிகளுடனான சிறந்த தலைமைத்துவ பண்புடைய முன்னனுபவமுடைய தொழில்வல்லுனர்களிடமிருந்து விண்ணப்ப படிவங்கள் கோரப்படுகின்றன.

பணிப்பாளர் சபைச் செயலாளர்

அடிப்படை தகமைகள்

1. விண்ணப்பதாரியானவர்,
   a. இலங்கை பட்டய கூட்டாண்மை செயலாளர்கள் நிறுவனத்தின் (ICCSSL) அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.
   அல்லது
   b. சட்டத்தரணியாக இருத்தல் (An Attorney at law) சட்டத்துறையில் முதுகலைப் பட்டம் பெற்றிருத்தல் விஷேட தகமையாக கருதப்படும்.

2. பதிவுசெய்யப்பட்ட கம்பனி செயலாளர் உரிமத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. ஆகக் குறைந்தது 03 வருடங்களிலான பணிப்பாளர் சபைச் செயலாளர் சார் (Board Secretarial) பதவியில் முன்னனுபவத்தினைக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் பணிப்பாளர் சபை மட்ட நிர்வாகம் மற்றும் ஒழுங்குமுறை இணக்கப்பாடுகள் தொடர்பில் தெளிவான அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   வங்கியிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனத்திலோ சேவையாற்றிய முன்னனுபவத்தினைக் கொண்டிருப்பது சாலப் பொருந்தும்.

4. வயது- 57 வருடங்களுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தகைமைகள் மற்றும் முன்னனுபவங்களுக்கு பொருந்தும் வகையிலான பேசித்தீர்மானிக்கக்கூடிய சம்பள பொதியானது பெற்றுக் கொடுக்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை

பூர்த்தி செய்யப்பட்ட உங்களது முழுமையான சுயவிபரக கோவையை உறவினரல்லாத சிபாரிசு செய்யும் இருவரின் தொடர்பு விபரங்களுடன் 2026 நவம்பர் 10ம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய விடயத்தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு careers@rdb.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

மேல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிராத அல்லது பிழையான தகவல்களை கொண்டிருக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஆட்சேர்ப்பு படிமுறையின் எக்கட்டத்திலும் எவ்வித முன்னறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும். சிறுபட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைப்பதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கு அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்வதற்கு வங்கிக்கு முழுமையான அதிகாரம் உண்டு.

பிரதான மனித வள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி
இலக்கம் 933, கண்டி வீதி,
வெதமுல்ல,
களனி

011 203 54 54
www.rdb.lk